Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    PEOPLES DAILY    மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2022    ஆவணி 25    ( 10 - 09 - 1991 )    செவ்வாய்க்கிழமை    ஓசை: 204

## புறக்கோட்டை பெட்டிக்கடையில் இராணுவ இரகசிய குறிப்புக்கள்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாண யுத்த தந்திரோபாயங்கள் உத்தரவுகள் அடங்கிய குறிப்புகளைக் கொண்ட மிக இரகசிய கோவைகள் புறக்கோட்டை பெட்டிக்கடைகளில் பொருள் சுற்ற பயன்படுத்தப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்த கடதாசிகளில் வவுனியாவில் புலிகள் முகாம்கள் இருக்கும் இடங்கள் என்று குறிப்பிட்ட சில குறிப்புகளும் அவ்விடங்களில் விமானங்கள் தாக்குதல் நடாத்த வேண்டும் என்பது பற்றியும இராணுவத்தால் வழங்கப்பட்ட உத்தரவுகளும் அதில் அடங்குகின்றன. இந்த கடதாசி கட்டுகள் சிலவற்றை கண்டெ (4 ஆம் பக்கம் பார்க்க)

# தன்னம்பிக்கை மிக்க புலிகளுக்கு தன்னிகரில்லா தலைவர் பிரபாகரன்

## வடக்கில் கண்டவற்றிலிருந்து பி. பி. ஸியின் கணிப்பீடு

(லண்டன்)

"உலகிலுள்ள முக்கிய கெரில்லா அமைப்புக்கள் எல்லாவற்றையும் விட புலிகள் கொள்கைப் பிடிப்பில் உறுதியாகவும் தன்னம்பிக்கை மிக்கவர்களாகவும் உள்ளார்கள். அதன் தலைவர் பிரபாகரனோ அவருடைய ஆதரவாளருக்கும் எதிர்ப்பாளருக்கும் உயிரோடு வாழும தன்னிகரில்லாத் தலைவராகத்தான் காட்சி அளிக்கின்றார் என்று சொன்னால் அது மிகையாகாது." இவ்வாறு பி.பி.ஸி நேற்றிரவு தனது செய்தி விமர்சனத்தில் தெரிவித்தது-



ஒனறுஎ மது மய துய புலிகளின் தற்கொலைப்படை

(4ஆம் பக்கம் பார்க்க)

அண்மையில் வடபகுதி வந்து திரும்பிய பி.பி ஸி செய்தியாளர் கிரிஸ்மோரிஸ் அங்கு கண்டவற்றைக் கணிப்பீடு செய்கதன் அடிப்படையில் வெளியான விமர்சனம் இதுவாகும். இதன் மேலதிக விபரங்களும் வருமாறு

யாழ்ப்பாணமே முழக்கங்கள் மலிந்த நகரமாகிவிட்டது. புலிகளின் கோஷங்கள் ஐம்புலன்களையும் தாக்குகின்றன நகரின் மையப் பகுதியிலிருந்து புலிகளின் குரல் எனும் வானொலி ஒலிபரப்பும் தேசபக்திப் பாடல்கள் ஒலிபெருக்கிகளில் முழங்கிக்கொண்டே இருக்கின்றன.

போரில் வீரமரணமடைந்தோரின் நினைவாக பல ஓவியங்கள் சுவர்களில் தீட்டப்பட்டுள்ளன. நான்கு ஆண்டுகளுக்கு முன்பு வெடிகள் நிரப்பப்பட்ட வாகனம் ஒன்றை இலங்கை இராணுவ முகாம்

## மணலாறு மோதலில் 6 புலிகள் வீரமரணம்

மணலாறு மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் கடந்த எட்டாம் திகதி ஆறு போராளிகள் வீரமரணம் அடைந்தனர்.

★ பரிமளா (கந்தசாமி சந்திரபவானி. முத்துமாரி அம்மன் லேன், திருநெல்வேலி)

★ மதுரா (பரமவடிவம்மான் சாவகச்சேரி வடக்கு, மீசாலை)

★ கல்பனா (கனகரட்ணம் அருள்நிதி, அல்வாய் தெற்கு, அல்வாய்)

★ சலுஜா (கணபதிப்பிள்ளை ரவீஸ்வரி, அண்ணா சிலையடி, கரணவாய் தெற்கு, கரவெட்டி)

(4ஆம் பக்கம் பார்க்க)

## உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கக் கோரிக்கை

(கொழும்பு)

லலித் உட்பட எட்டு பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்சியிலிருந்து கட்சி விதிகளுக்கமைய நீக்கப்பட்டிருப்பதால் பாராளுமன்ற உறுப்பினர் செயலாளருக்கு அறிவித்துள்ளது. இது தேர்தல் ஆணையாளருக்கும் முறைப்படி அறிவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை லலித் குழுவினர் உயர் நீதிமன்றத்தில்

## விபத்தில் பெண் மரணம்

(கொழும்புத்துறை)

அரியாலை கலைமகள் வீதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை 10.30 மணியளவில் மினிபஸ்ஸால் நெரிக்கப்பட்டு இவ்விடத்தைச் சேர்ந்த 30வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் அகால மரணமானார். (24)

## ஆந்திராவில் மூவர் கைது

(சென்னை)

தமிழ்நாட்டின் ஆந்திரப் பிரதேச எல்லையோரத்தில் இருக்கும் வரதபாளையம் என்ற கிராமத்தில் வைத்து மூன்று இலங்கைத் தமிழர்கள் தமிழகப்பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து ஒரு கைத்துப்பாக்கியும், 31 சுற்று தோட்டாக்களும் மீட்கப்பட்டதாக பொலிஸார் கூறியுள்ளனர். சந்திரகுமார், யோகேஸ்வரன், மதிகரன் என்னும் பெயர்களை உடைய இம்மூவரும் இருபதுக்கும், இருபத்திரண்டு வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## சதி நோக்கில் சிங்கள வரலாறு தமிழர் மீது திணிக்கப்பட்டது

தமிழீழத்தின் வரலாறு மழுங்கடிக்கப்பட்டு இய சதி நோக்

அம்மன் லேன், திருநெல்வேலி)

கரவெட்டி)

(4ஆம் பக்கம் பார்க்க)

## உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கக் கோரிக்கை

(கொழும்பு)

லலித் உட்பட எட்டு பாராளுமன்ற உறுப்பினர்களும் ட்சியிலிருந்து கட்சி விதிகளுக்கமைய நீக்கப்பட்டிருப்பதால் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலக்கப்பட வேண்டுமென்று ஐ. தே. கட்சி செயற்குழு பாராளுமன்ற செயலாளருக்கு அறிவித்துள்ளது. இது தேர்தல் ஆணையாளருக்கும் முறைப்படி அறிவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை லலித் குழுவினர் உயர் நீதிமன்றத்திற்குச் செல்லக் கூடுமென்று கொழும்பில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது

## வவுனியாவில் கண்ணிவெடி அகற்றும் இந்திய மீனவர்

(சென்னை)

கச்சதீவில் சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் வடபகுதி யுத்தமுனையில் கண்ணி வெடிகளைக் கண்டு பிடிக்கச் சிறிலங்கா ஆயுதப் படையினர் பயன்படுத்துகிறார்கள் என்று தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி எஸ். ராமமூர்த்தி

(4ஆம் பக்கம் பார்க்க)

அண்மையில் வடபகுதி வந்து திரும்பிய பி.பி.ஸி செய்தியாளர் கிரிஸ்மோரிஸ் அங்கு கண்டவற்றைக் கணிப்பீடு செய்ததன் அடிப்படையில் வெளியான விமர்சனம் இதுவாகும். இதன் மேலதிக விபரங்களும் வருமாறு

யாழ்ப்பாணமே முழக்கங்கள் மலிந்த நகரமாகிவிட்டது. புலிகளின் கோஷங்கள் ஐம்புலன்களையும் தாக்குகின்றன நகரின் மையப் பகுதியிலிருந்து புலிகளின் குரல் எனும் வானொலி ஒலிபரப்பும் தேசபக்திப் பாடல்கள் ஒலிபெருக்கிகளில் முழங்கிக்கொண்டே இருக்கின்றன.

போரில் வீரமரணமடைந்தோரின் நினைவாக பல ஓவியங்கள் சுவர்களில் தீட்டப்பட்டுள்ளன. நான்கு ஆண்டு

## பாசிக்குடாவிற்கு அருகில் புதைகுழியில் 35 சடலங்கள்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாசிக்குடாவிற்கு அருகில் புதைக்கப்பட்டிருந்த 35 பேர்களின் சடலங்களை இராணுவம் கண்டுபிடித்துள்ளதாகச் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவை கடந்த வருடம் காணாமற் போன சிறிலங்கா பொலிஸாரின் சடலங்களாக இருக்கலாம் எனவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

களுக்கு முன்பு வெடிகள் நிரப்பப்பட்ட வாகனம் ஒன்றை இலங்கை இராணுவ முகாம் ஒன்றுமீது செலுத்திய புலிகளின் தற்கொலைப்படை

(4ஆம் பக்கம் பார்க்க)



உடைய இம்மூவரும் இருபதுக்கும், இருபத்திரண்டு வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## சதி நோக்கில் சிங்கள வரலாறு தமிழர் மீது திணிக்கப்பட்டது

மகேந்திரராசா



தமிழீழத்தின் வரலாறு மழுங்கடிக்கப்பட்டு தீய சதி நோக்கத்துடன் சிங்கள வரலாறு எமது மக்கள் மேல் இதுவரை காலமும் திணிக்கப்பட்டு வந்திருக்கின்றது. இன்று இந்த வரலாற்று நூல்வெளியீட்டின் மூலம் எமது தேசத்தின் உண்மையான வரலாறு வெளிக்கொண்டு வரப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு நேற்று யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற ஆறாம் ஆண்டு மாணவர்களுக்கான வரலாற்றுப் பாடநூல் வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரை நிகழ்த்திய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு கோ மகேந்திரராசா தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில், இவ்வெளியீட்டின் மூலம் எமது மாணவர்கள் எமது தேசத்தின் உண்மை வரலாற்றைக் கற்கும் வாய்ப்பு உருவாகியுள்ளதுடன் இவ்வாறான விடயங்களில நாம் விழித்துக் கொண்டு விட்டோம் என்பதனையும் உணர்த்தக் கூடியதாக உள்ளது இதேபோன்றுஎமது முழுமையான வரலாற்றை எமது மக்களுக்கு உணர்த்துகின்ற நிலைமைஉருவாக வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

### வரலாறுகள் அழிப்பு

இந்த விழாவில் யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர். சிற்றம்பலம் பேசுகையில் 'அரசாட்சிப் பொறுப்பை ஏற்றவர்கள் தமக்கு ஏற்றபடி தமது வரலாறுகளை அமைத்து வந்தார்கள். தற்போதைய அரசும் சிங்கள மக்களது வரலாற்றை முதன்மைப் படுத்தி வந்தது. இதனை மறுத்துரைக்க இதுவரை காலமும் எவரும் முன்வரவில்லை. இதனால் எமது வரலாறுகள் பல அழிக்கப்பட்டுள்ளன பண்டைக் காலத்தில் தமிழ் அரசு ஒன்று இருந்ததா? என்று வியப்புடன் வினவும் அளவுக்கு எமது வரலாறு கடந்த காலங்களில் மறைக்கப்பட்டிருந்தது. இந்நூல் வெளியீட்டின் மூலம் தப்பான வரலாற்றுக் கருத்துக்களைத் திணிக்கும் முயற்சி தோல்வியடைந்துள்ளது' என்றார்.

### பெருமகிழ்ச்சி கொள்வோம்

யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. இ, சுந்தரலிங்கம் பேசுகையில் 'இன்று வரலாறு கண்ட வரலாற்றுத் திருநாள், நமது வரலாறு நம்மவர்களால் எழுதப்பட்டு வெளிப்படுத்தப்படுகின்ற முயற்சியில் முதற்கட்டமாக இந்த வரலாற்று நூல இன்று வெளியிடப்படுகிறது. இதையிட்டு நாமனைவரும் பெரு மகிழ்ச்சி கொள்ள வேண்டும் என்றார்' [4-ம் பக். பா]

## இடம் பெயர்ந்தோருக்கான உலர் உணவு நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து முகாம்களுக்கு வெளியில் தங்கியிருப்பவர்களுக்கான உலர் உணவு நிவாரண விநியோகம் இம்மாதத்துடன் நிறுத்தப் படவுள்ளது

மேற்படி உணவு விநியோகத்தை நிறுத்துவது என்று புனர்வாழ்வு அமைச்சு முடிவு செய்துள்ளதாக கொழும்பில் இருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

முகாம்களில் இடவசதி அற்ற காரணத்தால் இடம் பெயர்ந்தஒருபகுதியினர்தமது உறவினர்களுடன் தங்கியிரு

(4ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியாவில் 5 இராணுவம் பலி; ஆயுதங்கள் புலிகளால் மீட்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் சம்பவமொன்றில் ஐந்து இராணுவத்தினர் கொலலப்பட்டதுடன் இராணுவத்திடமிருந்து ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன. புலிகள் தரப்பில் இரண்டு போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக்காலை வவுனியா மாவட்டத்திலுள்ள தாண்டிக்குளத்திற்கும், மரக்காரம்பைக் குளத்திற்கும் இடையில் நிகழ்ந்துள்ளது.

அன்றையதினம் இப்பகுதியினூடாகஇராணுவத் தொடரணி செல்வதற்குப் பாதுகாப்பு வழங்க வந்த இராணுவத்தினரே இச் சம்பவத்தில் கொல்லப்பட்டவராவர்.

இராணுவத்தினரிடமிருந்து புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம்வருமாறு

- ★ ஏகே. எல்.எம்.ஜி. -01
  மகஸீன் -05
  லிங் -370
- ★ ரி56-II ரகத்துப்பாக்கி-04
  மகஸீன் -19
- ★ ஐ.எம் ரவைகள் -840
- ★ ஜேசுவோக்கி -02
  இதற்கான கொமாண்டோரொட் -02
- ★ ஜே. ஆர் கைக்குண்டுகள் -05

## ஆறு இராணுவத்தை வவுனியாவில் காணவில்லை

(வவுனியா)

வவுனியாவில் புலிகளுக்கு எதிராகமுடுக்கிவிடப்பட்டிருக்கும் தாக்குதலில் ஈடுபட்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினரில் ஆறு பேரைக் காணவில்லை எனச்செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் இது குறித்துத் தமக்கு எவ்வித தகவலும்இல்லை என்று கொழும்பில் ஒரு இராணுவ அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

## வவுனியாவில் 2 புலிகள் வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

வவுனியா மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடன் நேற்றுக்காலை ஏற்பட்ட மோதலின்போது லெப். அருட்செல்வன் (பூட்டோ) கறுப்பையா சிவலோகநாதன் கற்குளம் வவுனியா) லெப்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## வீமன்காமத்தில் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வீமன்காமத்தில் உள்ள சிறிலங்கா இராணுவத்தினரின் காவலரண்மீது நேற்றுக்காலை எட்டு மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இத்தாக்குதலால் ஏற்பட்ட சேத விபரங்கள் இதுவரை கிடைக்கவில்லை.

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் பிரசோற்பத்தி ஆண்டு ஆவணித் திங்கள் 26-ஆம் நாள் (11-09-1991) புதன்கிழமை முற்பகல் 10-51 மணிமுதல் 11-21 மணிவரை வரும் பூர்வதிருதியை திதியும். சித்திரை நக்ஷத்திரமும் சித்த சுபயோகமும் விருச்சிக லக்னமும் கூடிய சுபமுகூர்த்தத்தில்,

| | |
|---|---|
| எமது புத்திரன் திருநிறை செல்வன் | எமது புத்திரி |
| ரகு | திருநிறை செல்வி |
| (பங்காளர் ரவி அன் ராஜ் சில்க்ஸ்) | காருணி |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் திருமணம் நடாத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்புஞ்சூழ வருகை தந்து திருமணத் தம்பதிகளை வாழ்த்தியருளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் அன்புள்ள

திரு. திருமதி கந்தசாமிதுரை
(பங்காளர் ரவி அன் ராஜ் சில்க்ஸ்)
இல. 34, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்.

திருமதி கா. சாமி
இல. 77/5, புங்கன்குளம் வீதி,
நவநீதன் ஒழுங்கை,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

(B/3065)

---

## 'தேனிசை மழை'

யாழ். பல்கலைக்கழக விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் யாழ் ரங்கனோடு பிரபல கலைஞர்கள் வழங்கும் பல்சுவை 'தேனிசை மழை' இன்று மு.ப 9-00 மணிக்கும் பி.ப 2-30 மணிக்கும் வகலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

பிரவேசம் 25/-

(R/1729)

---

## மருதங்கேணி வைத்தியசாலையை மூடிவிடும் முயற்சிக்கு மக்கள் ஆட்சேபம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கிலுள்ள மருதங்கேணி அரசினர் வைத்தியசாலை இயங்காததினால் மருதங்கேணி தொடக்கம் குடாரப்பு வரை வாழ்கின்ற மக்களும், கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, ஆழியவளை, உடுத்துறை, வத்திராயன் ஆகிய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து செம்பியன்பற்று, மாமுனை ஆகிய இடங்களில் தங்கியிருக்கின்ற சுமார் ஆயிரம் குடும்பங்களும் வைத்திய வசதி எதுவும் இன்றி கஷ்டமடைகின்றனர்.

அகேவேளை, மருதங்கேணி வைத்தியசாலையை மூடிவிட்டு அங்குள்ள மருந்துப் பொருள்களையும், தளபாடங்களையும் பளை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதற்கான நடவடிக்கையினை, சுகாதார அதிகாரிகள் மேற்கொண்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

வடமராட்சி கிழக்கில் உள்ள ஒரே ஒரு அரசினர் வைத்தியசாலை இதுவாகும்.

வெற்றிலைக்கேணி இராணுவ நடவடிக்கையினால் வெளியேறிய குடும்பங்கள், தமது கிராமங்களுக்குப் படிப்படியாகத் திரும்பிக் கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில், இவ் வைத்தியசாலையை மூடிவிட எடுக்கும் நடவடிக்கையினையிட்டு பொது ஸ்தாபனங்களும், பொது மக்களும் ஆச்சரியத்தினைத் தெரிவித்துள்ளதுடன் வடபிராந்திய சுகாதார சேவை பணிப்பாளருக்கு ஆட்சேபனையைத் தெரிவித்து கடிதங்களையும் அனுப்பி வைத்துள்ளனர்.

(36

---

அரசாங்க எழுதுநர், கிராமசேவையாளர் பயிற்சிநெறிகள் விரிவுரைகள்

ஆரம்பம் 14-09-91 (3 மணி)

விரிவுரையாளர்கள்

திரு. க. குணராஜா
திரு. அ. குமாரவேல்

விண்ணப்பப் படிவங்களையும் விபரத் திரட்டினையும் நேரில் பெற்றுக்கொள்ளவும்.

நிர்வாகி

**புதிய உயர் கல்லூரி,**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(B/3089)

---

## யாழ்/பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

[முற்றிலும் பல்கலைக்கழக வசதிகளைக் கொண்ட நிறுவனம்]

**G.A.Q:-** LECTURES IN DAY TIME
LECTURES IN SAT & SUN.

ஆரம்பம்: 14-09-1991 (காலை 8.00 மணி)

1st. in **COMMERCE**
LECTURES IN DAY TIME
LECTURES IN SAT & SUN.

ஆரம்பம்:- 14-09-1991 (காலை 8.00மணி)

மு. குறிப்புகள்:-

(அ) பட்டப்படிப்புகளுக்கென தனித்துவம் வாய்ந்த விரிவுரையாளர்களும் விக்னா கல்வி நிறுவன விரிவுரையாளர்களும் ஒருங்கிணைந்து போதிக்கின்றனர்

(ஆ) நூலக வசதி மற்றும் வசதிகளைக்கொண்ட நிறுவனம்

(இ) G. A. Q 1ST IN Com. Day time விரிவுரைகள் ஐந்து நாட்களும் நடைபெறும்

(ஈ) ஒவ்வொரு பாடத்திற்கும் இரண்டு விரிவுரையாளரைக் கொண்டிருக்கும்

(உ) விக்னா கல்வி நிறுவனத்தில் பதிவு செய்த மாணவர்களுக்கான விரிவுரைகள்கீழ்க்காணும் முகவரியில் ஆரம்பமாகும்.

The College of Higher Studies
ANAIPANTHY, JAFFNA.

---

## எழுதுவினைஞர் தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிக்கும் பெண் எழுதுவினைஞர் தேவை. ஆங்கிலம் எழுத வாசிக்க தெரிந்தவர்களும், அனுபவம் உள்ளவர்களும், 24.- 30 வயதுக்குட்பட்டவர்களும் விண்ணப்பிக்கலாம். 13ஆம் திகதிக்கு முன் கீழ்க்காணும் முகவரியில் உள்ள அலுவலகங்களில் நேரடியாக முழுவிபரத்துடனும் விண்ணப்பிக்கவும்.

விக்னா கல்வி நிலையம்
52, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

The College of Higher Studies
Anaipanthi,
Jaffna.

(B/3087)

---

## 60-ம்நாள்நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



---

## மூன்று திங்களால் நிறைந்தகண்ணீர்அஞ்சலி

பூவரசங்குள நேரடிமோதலில் வீரமரணமடைந்த நாவற்குழியைச் சேர்ந்த

### வீரவேங்கை றஜின்
(பொன்னுத்துரை கிரிதரன்)

மடியில் முத்து
23-09 1973

மண்ணில் வித்து
14-06-1991

திதி: 10-09-91

சிரிதரா!
வவுனியாக்காட்டினிலே வானுயர்ந்த மரங்களெல்லாம்
எல்லலையை மீட்கின்ற இணையிலாப் போர்தனிலே
வீரத்தை வித்திட்டு வெங்குருதிச் சேறாடிப்
பொருதிட்ட வண்ணமெலாம் கதையாகச் சொல்லிவிடும்
செம்மண்ணின் துகள்களுமச் சேதியினைச் சொல்லிவிடும்

அதனால் நீ,
அமர்களத்தில் மாளவில்லை அகக்களத்தில் வாழ்கின்றாய்;
அமர்களத்தில் மாளவில்லை அகக்களத்தில் வாழ்கின்றாய்;
வாழ்கின்றாய்காண்கின்றாய்மறப்புலிகள்செயலெல்லாம்;
செயலெல்லாம் விளைவாகி தன்னாட்சி மலர்ந்திடுமே.

அருள் வீதி,
நாவற்குழி.

குடும்பத்தினரும்
நண்பர்களும்.

(4271)



(அ) பட்டப்படிப்புகளுக்கென தனித்துவம் வாய்ந்த விரிவுரையாளர்களும் விக்னா கல்வி நிறுவன விரிவுரையாளர்களும் ஒருங்கிணைந்து போதிக்கின்றனர்
(ஆ) நூலக வசதி மற்றும் வசதிகளைக்கொண்ட நிறுவனம்
(இ) G. A. Q 1ST IN Com. Day time விரிவுரைகள் ஐந்து நாட்களும் நடைபெறும்
(ஈ) ஒவ்வொரு பாடத்திற்கும் இரண்டு விரிவுரையாளரைக் கொண்டிருக்கும்
(உ) விக்னா கல்வி நிறுவனத்தில் பதிவு செய்த மாணவர்களுக்கான விரிவுரைகள்கீழ்க்காணும் முகவரியில் ஆரம்பமாகும்.

**The College of Higher Studies**
**ANAIPANTHY, JAFFNA.**
(ஆனைப்பந்தி தனியார் வைத்தியசாலைக்கு அருகாமையில்)

(B.3076)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 22 - 03 - 1976 | 28 - 07 - 1991 |

**வீரவேங்கை அனுஷா**
**(ஜெசிந்தா குமாரசாமி)**

"அனைவருக்காகவும் கண்ணீர் சிந்தாதவர்கள், அனைவரையும் இதயபூர்வமாக நேசிக்காதவர்கள், சுரண்டுகிறவர்களுக்கும், கொடுமைக்காரர்களுக்கும் எதிராக போராட மாட்டார்கள்"

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கும்,

கலைபாவோடை,
ஏழாலை தெற்கு,
ஏழாலை.

குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள்.

(B/3086)

## 60-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**லெப்டினன்ட் காந்தன்**
**(சுப்பிரமணியம் சிவகணேஷ்)**
நெளுக்குளம், வவுனியா.

| அன்னையின் மடியில் | அன்னைமண்ணின் விடிவில் |
|---|---|
| 1972-08-07 | 1991-07-13 |

"தமிழீழம் உலகோடு சமமாக நின்று தலை தூக்கி நிலை பெற்று வளமாக வேண்டும்"

தமிழீழம் என்னும் இலட்சியப் பாதையில் ஆனையிறவு எதிரிப்படையின் முகாமை உடைத்தெறிய உன்னோடு களம்புகுந்து சங்கமித்த அனைத்து வீரப் புலிகளின் ஆத்மசாந்தி வேண்டி எம்முயிர் உள்ளவரை உன்பணி தொடர்வோம்.

**10-09-91 இன்று நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொள்ளும்படி அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.**

வைகாளி சுப்பிரமணியம்
நெளுக்குளம்,
வவுனியா.

அன்பு அப்பா, அம்மா,
தங்கைகள்: கௌரி, லதா,
உறவினர்கள்.

(R/1700)

விட எடுக்கும் நடவடிக்கையினையிட்டு பொது ஸ்தாபனங்களும், பொது மக்களும் ஆச்சரியத்தினைத் தெரிவித்துள்ளதுடன் வடபிராந்திய சுகாதார சேவை பணிப்பாளருக்கு ஆட்சேபனையைத் தெரிவித்துக் கடிதங்களையும் அனுப்பி வைத்துள்ளனர்.

(36

அதனால் நீ,
அமர்களத்தில் மாளவில்லை அகக்களத்தில் வாழ்கின்றாய்;
அமர்களத்தில் மாளவில்லை அகக்களத்தில் வாழ்கின்றாய்;
வாழ்கின்றாய் காண்கின்றாய் மறப்புலிகள் செயலெல்லாம்;
செயலெல்லாம் விளைவாகி தன்னாட்சி மலர்ந்திடுமே.

அருள் வீதி,
நாவற்குழி.

குடும்பத்தினரும் நண்பர்களும்.

(4271)

நினைவு கூருகின்றோம்...

**1991 - 09 - 10**

**எட்வின்**



1984ஆம் ஆண்டு இதேதினத்தில் நாயாறு வீதியில் சிறிலங்கா இராணுவ வண்டித் தொடர் மீதான தாக்குதலில் வீரமரணமெய்திய
எட்வின் (இரத்தினசபாபதி திலீபன் - புதுக்குடியிருப்பு)
வவுனியாவில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட
16 தமிழ்ப் பயணிகள்
முல்லைத்தீவில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 2 தமிழர்கள்
1988ஆம் ஆண்டு வீரமரணமெய்திய
குட்டி (கிருபாமூர்த்தி)
புல்லுமலையில் இந்தியப்படையினரால் அடித்துக் கொலை செய்யப்பட்ட
காசன் பெ. குமாரவேல் - பசறை)
1989ஆம் ஆண்டு திருக்கோணமலையில் வீரமரணமெய்திய
லெப். பாஸ்கர்
யாழ்ப்பாணத்தில் வீரமரணமெய்திய
நடராசா சிறீதரன்
மட்டக்களப்பில் நேரடி மோதலில் வீரமரணமெய்திய
சின்னண்ணன்
1990ஆம் ஆண்டு யாழ். கோட்டைப் பகுதியில் சிறிலங்காப்படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய
ஜனாத்
யாழ். கோட்டைப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் வீரமரணமெய்திய
றவாஸ் (யோகரட்ணம் புனிதராசா - பலாலி தெற்கு, வசாவிளான்)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

(B/3075) **- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

❦ சிந்தனைக்கு ❦

நம்மை நாமே ஆளக் கற்றுத் தருவதே அரசாங்கங்களில் சிறந்தது.

— யோஹன் கேத்தெ

# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 10-09-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 925-2839 நிர்வாகபீடம் 5390
இ. வே. அனி 81

# மரவள்ளி நடுகைக்குத் தடை

# கரி விற்பனைக்கும் வரி

> மட்டக்களப்பு நிலைமைகள் குறித்து விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் திரு. கரிகாலன் 07.09.1991 அன்று "ஈழநாதம்" நிருபருக்கு வழங்கிய விசேட பேட்டியின் ஒரு பகுதி இங்கே தரப்படுகின்றது.

கேள்வி: மட்டக்களப்பு மக்களின் பொருளாதார நிலைகள் எவ்வாறு இருக்கின்றன?

பதில்: மட்டக்களப்பின் பிரதான பொருளாதாரம் விவசாயத்திலேயே தங்கியுள்ளது. இப்போது அரசின் நடவடிக்கைகளினால் விவசாயம் வெகுவாகப் பாதிப்படைந்துள்ளது. விவசாயச் செய்கைடன்னைக் கூடிய இடங்களுக்கு எரிபொருட்களைக் கொண்டு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது யூரியாவும் தடை செய்யப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஒருலட்சத்து முப்பத்தையாயிரம் ஏக்கர் விவசாய நிலங்களில். அறுபதினாயிரத்து முன்னூற்றுதொண்ணூறு ஏக்கர் செய்கை பண்ணப்படவில்லை. முப்பத்திநாலாயிரத்து எண்ணூற்றி பன்னிரெண்டு ஏக்கர் மேட்டு நிலப் பயிர்ச் செய்கையும் பாதிப்படைந்துள்ளன. கடந்த தை மாதம் வரை மேட்டு நிலப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது. எல்லாவற்றையும் இழந்த நிலையிலும் மக்கள் இதில் ஆர்வம் காட்டினர். எனினும் அறுவடைக் காலத்தில் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதால் மக்களுக்கு உரிய பயன் கிடைக்கவில்லை.

அம்பாறை மாவட்டத்தில் மக்களின் நிலை இன்றும் மோசமாகவுள்ளது. மாவடி வேம்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மரவள்ளி பயிரிட தடைசெய்துள்ளனர். மரவள்ளி உயரமாக வளர்வதால் மரவள்ளிக்குள் நாங்கள் மறைந்திருக்க வாய்ப்பு உண்டென்று காரணம் காட்டி இத்தடை விதிக்கப்பட்டுள்ளது. எந்தத் தொழிலுமே செய்ய முடியாதுள்ளது கரி சுட்டு விற்கும் தொழிலாளர்களிடம் மூடைக்கு ஐந்து ரூபாவரியினை சிறிலங்காப் படையினர் அறவிடுகின்றனர். இதனால் பெரும்பாலானோர் இத்தொழிலைக் கைவிட்டுள்ளனர். ஏனெனில் இத்தொழிலில் கிடைக்கும் வருமானமோ மிகவும் சொற்பம். அதற்குள் இராணுவத்துக்கு வரிகொடுக்க கட்டுப்படியாகாது என அவர்கள் கருதுகின்றார்கள். இவ்வாறே ஒவ்வொரு தொழிலுக்கும் இராணுவத்தினர் வரிவிதித்துள்ளனர்.

கேள்வி: முஸ்லிம் ஊர்காவல் படையினருக்கு எத்தனை முகாம்கள் உள்ளன?

பதில்: அம்பாறை மாவட்டத்தில் தான் அதிகம். இங்கு 26 முகாம்கள் உள்ளன இதைவிட ஏழு இராணுவ முகாம்களும் ஒரு கடற்படை முகாமும் 29 விசேட அதிரடிப் படை முகாம்களும் 6 சிங்கள ஊர்காவல் படை முகாம்களும் உள்ளன. இவையனைத்தும் தமிழ் மக்கள் மட்டும் வாழ்ந்த இடங்களில் உள்ளவை. இவர்களைவிட முஸ்லிம்கள்-சிங்களவர்கள் உள்ள இடங்களில் பல முகாம்கள் உள்ளன

கேள்வி: மட்டக்களப்பு மாவட்டத்தில் எத்தனை முகாம்கள் உள்ளன?

பதில்: இங்கு 5 முஸ்லிம் ஊர்காவல் படை முகாம்கள் உள்ளன. அத்துடன் 48 இராணுவ முகாம்களும் 2 கடற்படை முகாம்களும் ஒரு விமானப் படை முகாமும், 15 பொலிஸ் நிலையங்களும் உள்ளன

கேள்வி: முஸ்லிம் ஊர்காவல் படையினரின் செயற்பாடுகள் தற்போது எந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.

பதில்: இவர்கள் தன்னிச்சையாகச் செயற்படமுடியாது சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே அவர்கள் விருப்பு வெறுப்புகளின்படியே செயற்பட முடியும். சிறிலங்கா அரசு கொடுக்கும் ஆயுதங்களை மட்டுமே வைத்திருக்கமுடியும். காத்தான்குடி போன்ற இடங்களில் மேலதிகமாக வைத்திருந்த ஆயுதங்கள் சிறிலங்கா இராணுவத்தால் பறிமுதல் செய்யப்பட்டன.

கேள்வி; இந்த ஆயுதங்கள் எங்கிருந்து இவர்களுக்குக் கிடைத்தன.

பதில்: தேசிய இராணுவத்தைச் சேர்ந்த E N D L.F மற்றும் E P R.L F போன்ற இயக்கங்கள் இங்கிருந்து ஓடும் போது இவர்களிடம் இவற்றை விற்றிருக்கிறார்கள். சிறிலங்கா இராணுவம் சில சந்தர்ப்பங்களில் ஆயுதங்களைக் கையளியுங்கள் என்று ஒலிபெருக்கிமூலம் உத்தரவு பிறப்பிக்கும் பின்னர் திருப்ப வழங்கப்படும். இவ்வாறான நிலையிலேயே முஸ்லிம் ஊர்காவற்படையினர் செயற்படுகின்றனர்.

கேள்வி: முஸ்லிம் ஊர்காவல் படையினருக்கும் ரெலோ போன்ற இயக்கங்களுக்குமிடையில் முரண்பாடுகள் ஏற்படுவதில்லையா?

பதில்: ரெலோ போன்றவர்களால் என்ன செய்யமுடியும். அண்மையில் ஏறாவூரில் முஸ்லிம் ஊர்காவல் படைவீரர் ஒருவருக்கு அடித்த ரெலோ உறுப்பினர் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு தாக்கப்பட்டார். இவர்கள் எல்லோருமே இராணுவத்துக்கு கட்டுப்பட்டவர்கள். இந்த நிலையில் என்ன நடந்தாலும் ஏற்றுக்கொள்ள வேண்டியது தான்.

(தொடரும்)

# பிரதமர் என்றால் என்ன ஜனாதிபதி ஆனால் என்ன

சிறிலங்காவிற்கான அரசியல் அமைப்புமுறை தற்போது உள்ளது போன்று நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையாக இருக்க வேண்டுமா? அல்லது முன்னரைப் போல் பிரித்தானிய பாராளுமன்ற அமைப்பு முறைக்கு மாற வேண்டுமா? எனப் பெரும்வாதப் பிரதிவாதங்கள் தற்பொழுது எழுந்துள்ளன.

அண்மையில் திரு ஆர். பிரேமதாசா ஆட்சிக்கெதிரான நடவடிக்கையில் ஈடுபட்ட முன்னாள் ஐ. தே. கட்சி உறுப்பினர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அரசாங்கத்திற்கு எதிரான தமது நடவடிக்கைகளுக்கு முக்கிய காரணம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசியல் அமைப்பு முறை மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்பதேயாகும் எனத் தெரிவித்தனர்.

இதேவேளை, சிறிலங்காவில் எவ்வகையான ஆட்சி அமைப்பு இருத்தல் வேண்டும் என தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலரும் புத்திஜீவிகள் சிலரும் தற்போது வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்டுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது ஆனால் சிறிலங்காவின் இந்த ஆட்சி அமைப்பு முறை எவையும் இந்த இனங்களின் உரிமைகளைப் பேணுவதற்கு ஏற்புடையன எனக் கொள்ள கடந்தகால நிகழ்வுகளோ அன்றி நிகழ்கால நடத்தைகளோ ஆதாரமாக இல்லை.

இலங்கையின் சனத்தொகையில் சுமார் நான்கில் மூன்று பங்கினர் சிங்களவராகும். இந்த நிலையில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற கடும் போட்டி நிகழும் காலம் தவிர்ந்த எக்காலத்திலும் ஏனைய இனங்களுக்கு அரசியல் முக்கியத்துவம் வழங்கப்படத் தேவை இல்லை என்றே கூறலாம் இலங்கையில் இருந்து அந்நியர் வெளியேறிய போது கொண்டுவரப்பட்ட சோல்பரி அரசியலமைப்பு முறை 1970ம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்ததும் (1972இல்) மாற்றி அமைக்கப்பட்டது.

அதாவது 'இலங்கையின் சுதந்திரத்தின்' பின்-முதல் முறையாக மூன்றில் இரண்டு பெரும்பான்மையை ஆளும் சிங்களக் கட்சி ஒன்று பெற்றதும் தமிழர் உரிமை சட்டபூர்வமாக பறிக்கப்பட்டது. அதாவது தமிழரின் உதவியின்றி ஆட்சியை நடத்தலாம் என்ற நிலை உறுதிப்

# 20 ஏக். பயிர் நிலத்தில் ஜெயலலிதாவின் கூட்டம்

(சென்னை)

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் பொதுக் கூட்டம் ஒன்றுபயிர்ச் செய்கை மேற் கொள்ளப் பட்டிருந்த இருபது ஏக்கர் விளை நிலப்பரப்பில் நடை... ரூபாய் வீதம் வயல்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டது இந்த இடத்தை 15 நாட்களுக்கு முன்னர் பர்கூருக்கு இரு உயர் மட்ட அதிகாரிகள் சென்று தெரிவு செய்தனர்.

மேலும் பல ஏற்பாடுகள்

# மாவீரர் பிரேம்குமாருக்கு மக்கள் அஞ்சலி

(வடமராட்சி கிழக்கு)

மணலாற்றில் கடந்த வெள்ளிக்கிழமை சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் வீர மரணமடைந்த பிரேம்குமார் (தந்தையார் தயாபரன்- கரவெட்டி) என்ற ... மயானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் அடக்கம் செய்யப்பட்டது

தாமோதரம் வித்தியாலயத்தில் திரு. முரளி தலைமையில் நடைபெற்ற அஞ்

மூன்று பங்கினர் சிங்களவராகும். இந்த நிலையில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற கடும் போட்டி நிகழும் காலம் தவிர்ந்த எக்காலத்திலும் ஏனைய இனங்களுக்கு அரசியல் முக்கியத்துவம் வழங்கப்படத் தேவை இல்லை என்றே கூறலாம். இலங்கையில் இருந்து அந்நியர் வெளியேறிய போது கொண்டுவரப்பட்ட சோல்பரி அரசியலமைப்பு முறை 1970ம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்ததும் (1972இல்) மாற்றி அமைக்கப்பட்டது.

அதாவது 'இலங்கையின் சுதந்திரத்தின்' பின் முதல் முறையாக மூன்றில் இரண்டு பெரும்பான்மையை ஆளும் சிங்களக் கட்சி ஒன்று பெற்றதும் தமிழர் உரிமை சட்டபூர்வமாக பறிக்கப்பட்டது. அதாவது தமிழரின் உதவியின்றி ஆட்சியை நடத்தலாம் என்ற நிலை உறுதிப்பட்டதும் தமிழர் உரிமை பறிக்கப்பட்டது என்பதே உண்மை. அதோடு தமிழ்த்தலைவர்களின் பேரம் பேசும் அரசியலும், அவர்கள் தமது பலம் எனக் கருதிய சில பாராளுமன்ற ஆசனங்களின் முக்கியத்துவமும் பலமிழந்தன.

அதேவேளை, 1977ஆம் ஆண்டு ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஐ. தே. கட்சி ஆட்சிக்கு வந்ததும் மாற்றியமைத்த அரசியல் அமைப்பால் சிறுபான்மையினரின் உரிமைகள் எவையும் பாதுகாக்கப்படவுமில்லை. சிங்கள அரசியல்வாதிகள் தமிழர்களின் ஆசனங்களில் தங்கியிருக்கவுமில்லை. முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனாவின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசியல் அமைப்பு முறையின் கீழேயே தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டது. தமிழருக்கு எதிரான பல சட்டங்களும் ஏற்படுத்தப்பட்டன.

திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனா 1983ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த இனக்கலவரத்தைத் தொடர்ந்து தொலைக்காட்சியில் உரையாற்றுகையில் நான் சிங்கள மக்களின் தலைவனாகவே இருக்க விரும்புகிறேன் எனக் குறிப்பிட்டதிலிருந்து இலங்கையின் அரசியலிலும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அமைப்பிலும் ஏனைய இனங்களின் முக்கியத்துவம் சிங்கள ஆட்சியாளர்களுக்கு அவசியமானதல்ல என்பது தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

சிங்கள அரசியற் கட்சிகளுக்கு ஏனைய இனங்களின் தேவை அரசியலில் நீண்டகாலத்திற்கு ஒரு தடவையே ஏற்படக் கூடும். ஆனால், அவ்வாறு ஒரு நிலை உருவாகும் போது அது எந்த அரசியலமைப்பாயினும் சரி, முக்கியத்துவம் வழங்கப்பட்டே ஆகவேண்டி வரும். ஆனால், அவ்வாறானதொரு சூழ்நிலை கடந்த இருபது வருடங்களாக ஏற்படவில்லை. இனியும் அண்மையில் ஏற்படும் என்பதற்கான சூழ்நிலையும் இல்லை.

இந்த நிலையில் எப்பொழுதாவது அரிதாக நிகழும், தற்காலிகமான ஒன்றிற்காக தற்பொழுது நாம் இந்த இரு அரசியல் அமைப்பின் நன்மை தீமைகளைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. இதனால் இலாபம் எதுவுமில்லை.

அதேவேளை, இன்று பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தில் இருந்து விடுபடக் கூடிய சிங்களவருக்கு நிகரான அதிகாரம் உடைய ஒரு அரசியல் அமைப்பைப் பற்றியே தமிழர் சிந்திக்க வேண்டும். அதுவே தேவை.

## 20 ஏக். பயிர் நிலத்தில் ஜெயலலிதாவின் கூட்டம்

(சென்னை)

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் பொதுக் கூட்டம் ஒன்று பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்த இருபது ஏக்கர் விளை நிலப்பரப்பில் நடைபெற்றது.

முதல்வராக செல்வி ஜெயலலிதா பதவியேற்ற பின்னர் தனது தொகுதியான பர்கூருக்கு விஜயம் செய்த போதே இவ்விளை நிலப்பரப்பு கூட்டத்திற்கென ஒதுக்கப்பட்டது. பாதுகாப்புக் காரணங்களுக்கென தெரிவு செய்யப்பட்ட இந்த 20 ஏக்கர் விளை நிலப்பரப்பிற்கும் ஏக்கருக்கு 5000 ரூபாய் வீதம் வயல்களுக்கு நஷ்டஈடு கொடுக்கப்பட்டது. இந்த இடத்தை 15 நாட்களுக்கு முன்னர் பர்கூருக்கு இரு உயர் மட்ட அதிகாரிகள் சென்று தெரிவு செய்தனர்.

மேலும் பல ஏற்பாடுகள் தீவிரமாகக் கடைப்பிடிக்கப்பட்டன. புகைப்படக்காரர்கள் இருபது அடி தூரத்தில் அமர்த்தப்பட்டனர். பொது மக்கள் ஐம்பது அடி தூரத்தில் அமர்த்தப்பட்டனர். ஆயிரக்கணக்கான பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். மிக உயரமான கோபுரத்திலிருந்தும் பொலிஸார் கண்காணித்துக் கொண்டிருந்தனர்.

## அமைச்சர்கள் இராஜினாமா; வேலைகள் முடக்கம்

(கொழும்பு)

தொழில் அமைச்சர் ஜி எம். பிரேமச்சந்திராவும், ராஜாங்க தொழில் அமைச்சர் லக்ஷ்மன் செனிவரெட்னாவும் திடீர் இராஜினாமாச் செய்ததையடுத்து தொழில் அமைச்சில் வேலைகள் தேக்க நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் ராஜினாமாவினால் கல்வி அமைச்சின் வேலைகள் அவ்வளவாகப் பாதிக்கப்படவில்லையாம். கல்வி அமைச்சின் வேலைகள் ராஜாங்கக் கல்வி அமைச்சர் திருமதி ஆர். எம். புலேந்திரனிடமும், உயர் கல்வி திட்டமிடல் அமைச்சர் சுனேத்திரா ரணசிங்காவிடமும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

முக்கியமான முடிவுகளை இந்த இரு அமைச்சர்களும் எடுக்கக் கூடியதாக உள்ளன என்று கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## புதைக்கப்பட்ட இராணுவ அதிகாரியின் சடலத்தில் இருந்த சீருடை களைவு

(மாஸ்கோ)

சோவியத் ஜனாதிபதியின் முன்னாள் இராணுவ ஆலோசகரின் இறந்த சடலத்தில் இருந்து இராணுவ உடைகள் களையப்பட்டிருக்கின்றன.

புரட்சிச்சதியில் ஈடுபட்டு சதி தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்ட இவரது உடல் புதைக்கப்பட்டிருந்த குழியைத் தோண்டிய குண்டர்கள் சடலத்தில் இருந்த இராணுவ உடையைக் களைந்து சென்றனர்.

## மாவீரர் பிரேம்குமாருக்கு மக்கள் அஞ்சலி

(வடமராட்சி கிழக்கு)

மணலாற்றில் கடந்த வெள்ளிக்கிழமை சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் வீர மரணமடைந்த பிரேம்குமார் (அந்தையா தயாபரன் - கரவெட்டி) என்ற போராளியின் புகழுடம்பு வடமராட்சி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரதேச அலுவலகத்திலும், நவிண்டில் தாமோதரம் வித்தியாலயத்திலும், பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் வடமராட்சி மாவீரர் மயானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் அடக்கம் செய்யப்பட்டது.

தாமோதரம் வித்தியாலயத்தில் திரு. முரளி தலைமையில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் வடமராட்சி மக்கள் உறவு கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் திரு. அரசண்ணாவும் விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியைச் சேர்ந்த சந்திரிகாவும் அஞ்சலி உரையாற்றினார்கள். (36)

## அ. தி. மு. கவை இராணுவ அமைப்பாக மாற்றவேண்டும்

### - அழகு திருநாவுக்கரசு

(சென்னை)

"அ. தி. மு. கவை இராணுவ அமைப்பாக மாற்ற வேண்டும்" இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார் தமிழக அமைச்சர்களில் ஒருவரான அழகு திருநாவுக்கரசு. தனது சொந்தத் தொகுதியான பர்கூருக்கு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா விஜயம் செய்வதற்கு முன்னர் அவரது பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி ஒழுங்கு செய்வதற்குச் சென்றிருந்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். "இன்று நமது தலைவிக்கு கொலை மிரட்டல் வந்துள்ளது. நமது தலைவி அ. தி. மு. கவை இராணுவ அமைப்பாக மாற்றவேண்டும். அவ்வாறு மாற்றினால் கோடானகோடி மக்களுக்கும் பாதுகாப்பு ஏற்படும்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

## இஸ்ரேலுக்கு அமெ. உதவி இடைநிறுத்தம்

(வாஷிங்டன்)

இஸ்ரேலுக்கு வழங்குவதாக அமெரிக்கா ஒப்புக் கொண்ட முப்பது கோடி டாலர் கடனுதவியை அமெரிக்க அரசு தள்ளி வைத்துள்ளதாக அறிவித்துள்ளது. சோவியத் யூனியனிலிருந்து இடம்பெயர்ந்த யூதர்களை குடியேற்றுவதற்காக வழங்கப்படும் இக்கடனுதவி மூலம் ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசங்களில் யூதக் குடியேற்றங்களை இஸ்ரேல் நிறுவி வந்தமை தெரிந்ததே. அரபு-இஸ்ரேல் சமாதான மாநாட்டில் இஸ்ரேலைக் கலந்து கொள்ள வைக்க அமெரிக்கா முயல்வதாகக் கூறியுள்ள இஸ்ரேல், சமாதான மாநாட்டிற்கான முயற்சியையும் கடனுதவியையும் தொடர்புபடுத்த வேண்டாமெனக் கோரியுள்ளது.

# கடற்படை என்னால்தான் வடக்கே இயங்குகின்றது

**- லலித்**

ஐ. தே. கட்சியில் தொடர்ந்தும் இருக்க விரும்புகிறோம். அதற்காகவே நீதிமன்றம் சென்றோம் என லலித் அத்துலத்முதலி கடந்த வெள்ளியன்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில் எம். பிகள் என்ற முறையில் எமக்குள்ள உரிமைகளைப் பாவித்தே ஜனாதிபதி மீதான அரசியல் குற்ற மனுவைச் சமர்ப்பித்தோம். இதனை நீதிமன்றத்தில் விளக்கினோம். எனினும் அரசியல் அமைப்பு விவகாரம் இது என்பதால் நீதிமன்றம் மனுவை ஏற்கவில்லை. இனிமேல் நீதிமன்றம் தான் போக வேண்டும் என்றார்.

மேலும் அவர், நான்தான் துறைமுகத்தையும் அபிவிருத்தி செய்தவன். கப்பற்படையையும் பெருக்கியவன் என்றார். கடற்படை வடக்கு வரை இயங்க முடிந்திருப்பதும் என்னால்தான் என்றார். நான் அமைச்சரானபோது 10 படகுகள் இருந்தன தற்பொழுது 80 படகுகள் உள்ளன ஆனையிறவு விடுவிப்பில் இப்படகுகளே முக்கிய பங்காற்றின என்றும் குறிப்பிட்டார்.

இந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் சி ஐ. டி. யின

ரும் கலந்துகொண்டுள்ளனர். இவர்கள் சி. ஐ. டி. எனக் கூறிக்கொண்டு நேராக வந்திருக்கலாம். பத்திரிகையாளர் பெயரைப் பயன்படுத்தவேண்டுமா? அப்படிப் பயன்படுத்துவது நல்லதல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

இம்மாநாட்டில் கலந்துகொண்ட லக்ஷ்மன் செனவிரத்ன (எம். பி.) தான் மகியங்கனைக்குச் சென்றபோது மூன்று வாகனங்கள் தம்மைப் பின்தொடர்ந்ததாகவும், அதில் சிவில் உடை தரித்தவர்கள் இருந்ததாகவும் தெரிவித்தார்.

---

வவுனியாவில கண்ணி

குற்றம் சாட்டியுள்ளார்

இதேவேளை, கச்சதீவை முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா திரும்பக் கோருவதைக் குறித்து இந்தியப் பத்திரிகைகள் செல்வி ஜெயலலிதாவைக் கடுமையாகக் கண்டித்துள்ளன. இது தொடர்பாக பத்திரிகை ஆசிரியர்கள் மீதும் பத்திரிகை அரசியல்விமர்சகர்கள் மீதும் ஜெயலலிதா கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். அவர்களுக்கு மக்களைத் தெரியாது. மக்களுக்கும் அவர்களைத் தெரியாது என்றும் ஜெயலலிதா குற்றம் சாட்டியுள்ளார்.

---

இடம்

ந்த போதிலும் இவர்களுக்கு வாராந்த உலர் உணவு இதுவரை வழங்கப்பட்டு வந்தது. அடுத்த மாதம் முதல் இவ் விநியோகம் நிறுத்தப்பட்டு முகாம்களில் இருப்பவர்களுக்கு மட்டுமே உலர் உணவு வழங்கப்பட இருக்கின்றது. (க

---

மணலாறு

- ★ அக்கினோ (இராசரட்ணம் கலைவாணி, கைதடி, நுணாவில்)
- ★ குணசீலி (தயாராசா சிவராஜி திருநெல்வேலி)

ஆகிய ஆறு வேங்கைகளுமே வீரமரணம் அடைந்தோராவர். இவர்களுக்கு புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்து கொண்டுள்ளனர்.

---

புறக்கோட்டை

டுத்த பொதுமக்கள் சிலர் ஏரிக்கரை பத்திரிகை அலுவலகத்தில் கொண்டு சென்று ஒப்படைத்துள்ளனர்.

மேலும் வவுனியா கிளிநொச்சி யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் முகாம்களின் இடங்கள் பாதைகள் ஆகியனவும் குறிக்கப்பட்டு இவைமீது தாக்குதல் நடாத்தப்படவேண்டும் என்ற உத்தரவுகளடங்கிய தஸ்தாவேஜுக்களும் உள்ளன இவை எவையும் பழையனவல்ல இந்தவருட முற்பகுதியைச் சேர்ந்தவை என்றும் இவை

---

வவுனியாவில்

வேங்கை (ராம்ராஜ்) மயில்வாகனம் தமிழ்ச்செல்வன் பாவற்குளம், வவுனிய ) ஆகியோர் வீரமரணமடைந்துள்

---

தன்னம்பிக்கை

வீரனின் நினைவாக அந்த இராணுவ முகாம் இடிபாடுகளுக்கு அருகில் அவர் ஓவியம் ஒன்று வரையப்பட்டுள்ளது.

அதன்கீழ் "உனது தோள்களில் எரிமலையை சுமக்கிறாய் உன்னை ஒருவராலும் தோற்கடிக்க முடியாது" என்று எழுதப்பட்டுள்ளது

## உலகில் தன்னம்பிக்கை மிக்கவர்கள்

புலிகள் தன்னம்பிக்கை மிக்கவராக உள்ளார்கள் உலகின் மற்றைய கெரில்லா அமைப்புகளைவிட இந்த அமைப்பில் உள்ளவர்கள் தமது கொள்கைப்பிடிப்பில் உறுதியாக உள்ளனர். இந்த உறுதியின் சின்னம்தான் சயனைட் குப்பி. மூன்றுமாத இராணுவப் பயிற்சி முடித்த புலிகள் அனைவரும் இக்குப்பியை கழுத்தில் மாலையாக தொங்கவிட்டுக் கொண்டுள்ளார்கள்.

எதிரியின் கையில் சிக்கும் நிலை ஏற்பட்டால் உடனடியாக குப்பியிலிருக்கும் சயனைட்டை விழுங்கி வீரமரணம் எய்துகிறார்கள். இதன்மூலம் ரகசியங்களை காப்பாற்றி விடுகிறார்கள்

வெளியாருக்கு இது படுமோசமானதாக உள்ளது. ஆனால் இளம் புலிகளுக்கு இது இயல்பாகவே தோன்றுகிறது

## பெண்களின் பயிற்சி முகாம்:

யாழ்ப்பாணத்துக்கு வடக்கே ஒரு பயிற்சி முகாமில் இருநூறு இளம் பெண்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள் காலையில் சிவப்பு நிறத்திலிருக்கும் புலிகளின் கொடியேற்றப்பட்டு தமது இயக்கத்தின் கொள்கைகளை காப்பது பற்றிய உறுதிமொழியை அனைவரும் எடுத்துக் கொள்கிறார்கள்.

அதனைத் தொடர்ந்து உடற்பயிற்சி, இராணுவப் பயிற்சி முதலானவை முடிந்த பின் அரசியல் வகுப்புகள் நடைபெறுகின்றன. இந்த அரசியல் வகுப்புகளில் பெரும்பான்மை இனத்தவரான சிங்களவர் தமிழருக்கு இழைத்த அநீதிகள் பற்றியும் புலிகளின் பார்வையில் நாட்டு வரலாறு இன்னதென்றும் வகுப்புகள் நடைபெறுகின்றன.

## கட்டாயப்படுத்தவில்லை

தங்கள் இயககத்தில் சேர்ந்துள்ளவர்கள் பலர் மிக இளையவர்கள் என்பதை அவர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால் தாங்கள் யாரையும் கட்டாயப்படுத்தி இயக்கத்தில் சேர்க்கவில்லை என்று கூறுகிறார்கள்.

புலிகளின் அரசியல் தலைவர் யோகரட்ணம் என்கின்ற யோகி அவர்கள் தங்கள் குடும்பத்தவர்களுக்கும், நண்பர்களுக்கும் இழைக்கப்பட்ட கொடுமைகளைக் கண்டு எங்கள் இயக்கத்தில் தாமாகவே சேர்ந்த தொண்டர்கள் என்று அவர்களை வர்ணிக்கிறார்.

## உணர்வுடன் பேசும் புலிகள்

இந்த இளம் புலிகளை ஏன் இப்படி போர் செய்ய வந்தீர்கள் என்று கேட்டால் ஒரே மாதிரினான காரணங்களைச் சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் இயந்திர மனிதர்கள் போல் பேசவில்லை. உணர்ந்துதான் பேசுகிறார்கள். இவர்கள் தேநீர் அருந்தும்போதும், பகல்உணவு உண்ணும் போதும் கேலியும் சிரிப்புமாக இருக்கிறது. கடும் இராணுவ ஒழுங்குமுறை தளர்த்தப்பட்ட நேரங்களில் நகைச்சுவை பட பேசுகிறார்கள்.

ஒரு மரத்தின் பின்புறம் பதுங்கி இருந்தபோதே அருகில் வெடித்த குண்டினால் இரண்டு கைகளையும் இழந்துவிட்ட சுதா என்னும் இளம் பெண்கூட புன்சிரிப்புடன்தான் காட்சி அளிக்கிறாள். இப்போது அவள் பேனாவை வாயில் கவ்வி எழுதப்பழகுகிறாள். காலால் துப்பாக்கியை இயக்கப் பயிற்சி செய்து வருகிறாள். இந்த அளவுக்கு கொள்கைப் பற்றும் ஒழுங்கும் இயக்கத்தில் காணப்படுகிறது.

இப்போது விடுதலைப்புலிகள் தாங்கள் மட்டும்தான் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று அங்கீகரிக்கப்படவேண்டும் என்று கூறுகிறார்கள். வடபகுதியில் வேறு எந்த அரசியல் கட்சியும் இயங்க அனுமதிக்க மாட்டோம் என்று அவர்கள் கூறிவருகிறார்கள். வடபகுதி அவர்கள் கட்டுப்பாட்டில்தான் உள்ளது.

---

# இரகசிய வாக்கெடுப்பு ஆரோக்கியமற்றது

**- டெஸ்மன்ட்பெர்னான்டோ**

(கொழும்பு)

பாராளுமன்ற நிலையில் கட்டளையில் திருத்தம் செய்வதன் மூலம் பாராளுமன்றத்தில் இரகசிய வாக்கெடுப்பைக் கொணரலாம். ஆனால் இரகசிய வாக்கெடுப்பானது ஆரோக்கியமற்ற முன்மாதிரி என்று சிறிலங்கா வழக்கறிஞர் சங்க முன்னாள் தலைவர் டெஸ்மன்ட் பெர்னான்டோ பாராளுமன்ற உறுப்பினர்களை எச்சரித்துள்ளார்

பாராளுமன்ற உறுப்பினரிடம் ஜனாதிபதி ஆர் பிரேமதாசாவுக்கு எதிரான குற்றச்சாட்டு மனுவில் கபடமாக, ஏமாற்றி அல்லது தவறுதலாக வழிநடத்தப்பட்டுக் கையொப்பம் பெறப்பட்டிருந்தால், மனுவைச் செல்லுபடியாகாதது எனச் சபாநாயர் தன்னுபடி செய்ய வேண்டும் என்று கொழும்பில் அரசியல் அமைப்புச் சட்ட வல்லுனர்கள் கருத்துக் தெரிவித்துள்ளனர்.

குற்றச் சாட்டு மனுவில் ஒரு கையெழுத்துத்தானும் தவறுதலாகப் பெறப்பட்டிருப்பின் ஆவணம் முழுவதுமே கறைபடிந்ததாகக் கருதப்படும் என்று டெஸ்மன்ட் பெர்னான்டோ தெரிவித்தார்.

---

## தன்னிகர் இல்லாத் தலைவன்

"புலிகளின் உச்சநிலைத் தளபதி வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் வகுந்திக்காரர்களால் பலமுறை கொல்லப்பட்டவர். அவருக்கே எத்தனை முறை என்று நினைவிருக்குமா என்பது சந்தேகமே அவருடைய ஆதரவாளர்களுக்கும், எதிர்ப்பாளர்களுக்கும் அவர் உயிரோடு வாழும் தன்னிகரில்லாத் தலைவராகத் தான்காட்சியளிக்கிறார் என்று சொன்னால் அது மிகையாகாது.

புலிபோல வரிபோடப்பட்ட இராணுவ உடையில் அவர் கம்பீரமாக தோற்றமளித்து "போர் நல்லாத்தான் போயிட்டிருக்கு" என்று எமக்கு சொன்னார்,

போரினால் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் தமிழரும் சிங்களவரும் செத்து மடிகிறார்களே என்ற கேள்விக்கு அவர் பதட்டப்படாமல் இந்த இனப்பிரச்சினை தீர இராணுவத்தீர்வு ஒன்றை திணிக்க முடியாது என்பது இப்பொழுது சிறிலங்கா அரசுக்கு தெரிந்திருக்கும் என்று பதிலளித்தார்.

சர்வாதிகார முறைகளை பயன்படுத்துகிறீர்களா என்று கேட்டதற்கு அவ்வாறெல்லாம் அல்ல இப்பொழுது அரசியல் சமூக அமைப்புகளை விரைவாக உருவாக்கி உள்ளோம் என்று கூறுகிறார்

இயக்கத்தில் சேர்ந்துள்ள இளைஞர்கள் நன்கு கவனிக்கப்படுகிறார்கள் என்றும் தேவையான போதே போரில் ஈடுபடுகிறார்கள் என்றும் அவர் கூறினார்

சமீபத்தில் ஆனையிறவு முகாமை கைப்பற்ற நடைபெற்ற பெரும் மோதலில் ஏற்பட்ட தோல்வியின் பின்பும்கூட பிரபாகரன் அவர்களின் தன்னம்பிக்கை குறைந்துவிட்டதாக தோன்றவில்லை

பலவற்றைக் கற்றுக் கொண்டோம் என்று கூறி அவர் இந்தப்போர் கெரில்லாப் போர் மரபுவழிப்படையாக மாறிவரும் பாதையில் ஒரு முக்கியமான கட்டம் என்று விளக்கினார் புலிகளின் தரப்பில் ஐந்நூறு பேர் இறந்துவிட்டதாகவும் அவர்களின் புகைப்படங்கள் அடங்கிய நூல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

---

பட்டப்படிப்புகள் கல்லூரி

[illegible] கள் மீதும் ஜெயலலிதா கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். அவர்களுக்கு மக்களைத் தெரியாது. மக்களுக்கும் அவர்களைத் தெரியாது என்றும் ஜெயலலிதா குற்றம் சாட்டியுள்ளார்.

### வவுனியாவல்

வேங்கை (ராம்ராஜ்) மயில் வாகனம் தமிழ்ச்செல்வன் பாவற்குளம், வவுனிய ) ஆகியோர் வீரமரணமடைந்துள்ளனர்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமதுவீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

படைத்துள்ளனர்.

மேலும் வவுனியா கிளிநொச்சி யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்ட விடுதலைப்புலிகள் முகாம்களின் இடங்கள் பாதைகள் ஆகியனவும் குறிக்கப்பட்டு இவைமீது தாக்குதல் நடாத்தப்படவேண்டும் என்ற உத்தரவுகளடங்கிய தஸ்தாவேஜுக்களும் உள்ளன இவை எவையும் பழையன வல்ல இந்தவருட முற்பகுதியைச் சேர்ந்தவை என்றும் இவை எப்படி புறக்கோட்டைக்கு வந்தன என்பதும் மர்மமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கள்.

அதனைத் தொடர்ந்து உடற்பயிற்சி, இராணுவப் பயிற்சி முதலானவை முடிந்த பின் அரசியல் வகுப்புகள் நடைபெறுகின்றன. இந்த அரசியல் வகுப்புகளில் பெரும்பான்மை இனத்தவரான சிங்களவர் தமிழருக்கு இழைத்த அநீதிகள் பற்றியும் புலிகளின் பார்வையில் நாட்டு வரலாறு இன்னதென்றும் வகுப்புகள் நடைபெறுகின்றன.

இப்போது விடுதலைப்புலிகள் தாங்கள் மட்டும் தான் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று அங்கீகரிக்கப்படவேண்டும் என்று கூறுகிறார்கள். வடபகுதியில் வேறு எந்த அரசியல் கட்சியும் இயங்க அனுமதிக்க மாட்டோம் என்று அவர்கள் கூறிவருகிறார்கள். வடபகுதி அவர்கள் கட்டுப்பாட்டில்தான் உள்ளது.

க்கான பொதுமக்கள் தமிழரும் சிங்களவரும் செத்து மடிகிறார்களே என்ற கேள்விக்கு அவர் பதட்டப்படாமல் இந்த இனப்பிரச்சினை தீர இராணுவத்தீர்வு ஒன்றை திணிக்க முடியாது என்பது இப்பொழுது சிறிலங்கா அரசுக்கு தெரிந்திருக்கும் என்று பதிலளித்தார்.

போர் மரபுவழிப்படையாக மாறிவரும் பாதையில் ஒரு முக்கியமான கட்டம் என்று விளக்கினார் புலிகளின் தரப்பில் ஐந்நூறு பேர் இறந்துவிட்டதாகவும் அவர்களின் புகைப்படங்கள் அடங்கிய நூல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

## வீரமரணம்



### லெப். குணசீலி

(தியாகராஜா சிவராஜி)

| வீரஜனனம்: | வீரமரணம்: |
| --- | --- |
| 29-09-.973 | 08-09-1991 |

மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்துடனான மோதலில் வீரமரணமடைந்து விட்டார். இவருக்கு எமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறோம். இவருடன் வீரமரணமடைந்த ஏனைய போராளிகளுக்கும் எமது வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்

மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி. (R/1728) குடும்பத்தினர்

சதிநோக்கில்

## நம்மவருக்குத் தெரியாது

இவ்விழாவில் உரையாற்றிய மக்கள் முன்னணிச் செயலாளர் திரு. யோகி ''நல்லூர் கோயிலும், அங்கிருந்த தமிழ் அரசின் வரலாற்றுச் சின்னங்களும் இடிக்கப்பட்ட வரலாறு நம்மவர்களில் பலருக்குத் தெரியாது. இன்று நல்லூர் கோயிலுக்குச் செல்பவர்கள், நமது மூதாதையர்கள். அன்றுநல்லூரில் உள்ள நமது வரலாற்றுச் சின்னங்கள் இடிக்கப்பட்டு அங்கே கோட்டை கட்டப்பட்டபோது கற்களைச் சுமந்து சென்றவர்கள் நம்மவர்கள் என்பதை அறிந்திருக்க மாட்டார்கள்'' என்றார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் எமது தாயக வரலாற்றின் பல அம்சங்கள் இன்று சிலருக்கு முற்றாகத் தெரியாத நிலை இருக்கின்றது. இந்நிலையை இவ்வாறான சில முயற்சிகள் நீக்கி வைக்கும் என்றார்.

## சிறுமைப்படுத்தப்பட்டது

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மூத்த உறுப்பினர் திரு. இளங்குமரன் பேசுகையில்,

மகாவம்ச காலத்தில் இருந்து நமது தமிழரின் வரலாறு சிறுமைப்படுத்தப்பட்டு, மறைக்கப்பட்டு வந்துள்ளது. அவற்றிற்கெல்லாம் ஒருபடி மேலாக 1990 ஆம் ஆண்டு சிறிலங்கா அரசு வெளியிட்ட பள்ளி மாணவருக்கான வரலாற்று நூல் மகாவம்சத்தில் நம்மைப் பற்றிக் கூறப்பட்ட விடயங்களைக் கூட திரித்து, மழுங்கடித்து, மூடி மறைத்துள்ளது.

எமது வரலாறு சிங்களவர்களால் சிங்களத்தில் எழுதப்பட்டு சிங்களத்தில் இருந்து தமிழுக்கு மொழி பெயர்க்கும் நிலையே இன்றுள்ளது'' என்றார்.

## புரியமுடியாத நிலை

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர் திரு. வே. பாலகுமாரன் உரையாற்றும்போது ''பிற வரலாறுகள் நம் மக்கள் மத்தியில் வெளிப்படுத்தப்பட்டு நம்மவர்களுக்கு நமது வரலாற்றையே புரிய முடியாதநிலை எம்மிடையே உருவாகியிருந்தது. அவ்வாறான துரதிர்ஷ்ட நிலை இவ்வரலாற்று நூல் வெளியீட்டின் மூலம் நீக்கப்படுகின்றது'' என்றார்.

## வரலாறு மறைக்கப்பட்டது

யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றுகையில், ''இதுவரை காலமும் அரசினால் ஆக்கப்பட்ட வரலாற்று நூல்களில் தமிழரின் வரலாறுகள் பல மறைக்கப்பட்டுள்ளன. பல விடயங்கள் சிலேடையானமுறையில் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, சிங்களவரின் வரலாறு மிகைப்படுத்தப்பட்டுள்ளது எமது வரலாறு முழுமையான முறையில் வெளிப்படுத்தப்படாத ஒரு நிலைக்கு இவ்வரலாற்று நூல் ஒரு நிவாரணமாக அமையும்'' என்றார்.


## பட்டப்படிப்புகள் கல்லூரி

### புதியமாணவர்களை அனுமதித்தல்

**1991/1992**

பேராதனை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகங்களின் வெளிநிலைப்பட்டப் பாடநெறிகளுக்கான விரிவுரைகள் 28 9-91ல்

### ஆரம்பமாகவுள்ளன

க பொ. த உயர்தரம் 3பாடங்களில் சித்தியடைந்வர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

★ கலைமுதற் தேர்வு G. A. Q.
★ வணிகமுதற் தேர்வு FIRST IN COMMERCE
★ விஞ்ஞானமுதற் தேர்வுG.S.Q. (புள்ளி விபரவியல்)

பேராதனைப் பல்கலைக்கழகவிரிவுரைகள்யாவும் பின்வரும் முகவரியில் நடைபெறும்.

**பட்டப்படிப்புகள் கல்லூரி**
57/48 ஸ்ரான்லி வீதி,
(இலங்கை வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரைகள் யாவும் பின்வரும் முகவரியில் நடைபெறும்.

**பட்டப்படிப்புகள் கல்லூரி**
148/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ் நகரில் கடந்த 14 வருடங்களாக பட்டப் படிப்புகளுக்கென தனித்துவமாக இயங்கி வரும் ஒரேயொரு நிறுவனம்.

(B/3091)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.